நாள்: 20.07.2026
OS. 10/2025
பெயர் கருப்பையா
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (வாதி தரப்பு)

2023 லிருந்து என் மகனுக்கும், என் மருமகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு வீடு 2023 லிருந்து பூட்டி தான் உள்ளது. 2023 லிருந்து வீட்டிற்கு குடிநீர்கட்டணம், சொத்து வரி, மின்கட்டணம், எதுவும் என் மகனோ, மருமகளோ கட்டவில்லை என்றால் என் மகனுக்கு தான் தெரியும். வீட்டிற்குரிய சொத்துவரி, மின் கட்டணம் வாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இன்று வரை வாதி தான் வீட்டுக்குரிய வரி செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒத்தி தொகை ரூ.3,50,000/–த்தை என் மகனுக்கும், 1 லட்சத்தை என் மருமகளுக்கு கிடைக்கவேண்டிய தொகையை வாங்க மறுத்ததால் வாதி நீதிமன்றத்தில் கட்டி விட்ட நிலையில் தாவா வீட்டை காலி செய்து கொடுக்கவேண்டும் என்றால் என் மகனை பொறுத்து எந்த ஆட்சேபனையும் இல்லை. காலி செய்ய தயாராக இருக்கிறார். ரூ.4,50,000/–ம் நான் தான் தயார் செய்து வாதியிடம் கொடுத்தேன். மேற்படி 4,50,000/– கொடுத்தேன் என்பதை காட்ட எழுத்துப்பூர்வமான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.20 19:22:22 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்